பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 01 2025 **SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நமது நாடு ஜனநாயகத்தின் தாயகமாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பேரிடர் மேலாண்மையில் நாடு முன்னிலை வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான தற்காலிக போர் நிறுத்தம் இன்று செயல்பாட்டுக்கு வந்தது.
- தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளின் அநேக இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- உலக கோ கோ போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா கோப்பையை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>>**

நமது நாடு ஜனநாயகத்தின் தாயகமாக விளங்குகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில், அவர் இவ்வாறு கூறினார்.

வரும் 25-ஆம் தேதியன்று தேசிய வாக்காளர்தினம் கொண்டாடப்படுவதை குறிப்பிட்ட பிரதமர், மக்களாட்சி குறித்த அனைத்து சந்தேகங்களும் தவறானவை என்பதை நமது நாடு உலக அரங்கில் நிரூபித்து வருவதாக தெரிவித்தார்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தில் தேர்தல் ஆணையத்துக்கு மிகப்பெரிய இடம் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் செயல்பாட்டை வலுப்படுத்தும் வகையில், நாட்டு மக்கள் அனைவரும் தங்களின் வாக்கு உரிமையை பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

சுயனலமற்ற உணர்வோடு நாட்டுக்கு சேவையாற்றுபவர்களை வெளிச்சமிட்டு காட்டும் ஒரு மேடையாக மனதின் குரல் விளங்குகிறது என்று திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

லட்சத்தீவுகளை சேர்ந்த ஹிண்டும்பி, கே ஜி முகமது ஆகியோர் பணி ஓய்வுக்கு பிறகும் மக்கள் சேவையில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - தமிழ் மோடி – (1) 51 செகண்ட்ஸ்)*

அந்தமான் நிக்கோபாரில் தயாரிக்கப்படும் தூய்மையான தேங்காய் எண்ணெய்க்கு புவிசார் குறியீடு கிடைத்திருப்பதாகவும், அதனை தயாரிக்கும் பணியில் அங்குள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

*(சவுண்ட் பைட் - தமிழ் மோடி – (2) 39 செகண்ட்ஸ்)*

மனதின் குரல் நிகழ்ச்சிக்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு வளர்ச்சியடைந்த பாரதம் என்ற உறுதிபாட்டின்மீதான தமது நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் - தமிழ் மோடி – (3) 23 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

பேரிடர் காலங்களில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், தன்னலமற்ற முறையில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் சேவையாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப்படையின் நிறுவன தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வோடு அப்படையினர் தொடர்ந்து செயலாற்றி வருவதற்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

பேரிடர் மேலாண்மையில் நாடு முன்னணி இடத்தை பெற்றிருப்பதாகவும், எல்லைகளை தாண்டி, நட்பு நாடுகளிலும் பேரிடர் மீட்புப்படையின் சேவை விரிவடைந்திருப்பதாகவும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் தேசிய பேரிடர் மீட்புப்படையின் 20-ஆவது நிறுவன தின கொண்டாட்டத்தில் அவர் இன்று பங்கேற்று பேசினார்.

சமீப கால புயல் தாக்குதல்களின்போது உயிரிழப்புகளை முற்றிலுமாக தடுக்கும் வகையில் தேசிய பேரிடர் மீட்புப்படை செயலாற்றியதாகவும், பேரிடர் காலங்களில், அதன் செயல்பாடு அளப்பரியதாக உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது, கிருஷ்ணா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் தென்னக வளாகத்தை திரு அமித் ஷா காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

மேலும், திருப்பதியில் உள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வக கட்டிடத்தையும், பீகாரின் ‘Supaul –ல் அமைக்கப்பட்டுள்ள தேசிய பேரிடர் மீட்பு படையின் மண்டல தகவல் மையத்தையும் அவர் இன்று திறந்துவைத்தார்.

ஆந்திராப்பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தை பயன்படுத்தி, தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் தென்னக வளாகத்தை அமைத்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக இந்நிகழ்ச்சியில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

ஆந்திர மாநிலத்தில், புயல் போன்ற பேரிடர்களின்போது தேசிய மீட்புப்படை உடனடியாகவும், சிறப்பாகவும் செயல்பட்டதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

**<<<<>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளா சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தின் சங்கமமாமக விளங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் இதனை தெரிவித்த அவர், வேற்றுமையில் ஒற்றுமை என்பதன் அடையாளமாக இது அமைந்துள்ளதாக கூறினார்.

ஏழை - பணக்காரர், முதியோர் - இளையோர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக இதில் பங்கேற்று வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த கும்பமேளாவில் டிஜிட்டல் பயன்பாடு அதிக அளவில் இடம்பெற்றுள்ளது என்றும், இவ்விழாவானது இந்தியர் அனைவரின் பெருமை என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, கும்பமேளா நடைபெறும் 19-ஆவது செக்டார் பகுதியின் கூடாரத்தில் உணவு சமைக்கும்போது சிறிய அளவில் தீ விபத்து நேரிட்டதாகவும், உடனடியாக தீ அணைக்கப்பட்டு அங்கு இயல்பு நிலை திரும்பியதாகவும் உத்தரப்பிரதேச மாநில அரசு சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான தற்காலிக போர் நிறுத்தம் இன்று செயல்பாட்டுக்கு வந்தது. இத்தகவலை கத்தார் உறுதிப்படுத்தியுள்ளது.

இருதரப்புக்கும் இடையேயான இந்த அமைதி ஒப்பந்தம் மூன்று மணிநேரம் தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டதாக அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்த அமைதி ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, இன்று விடுவிக்கப்பட இருக்கும் மூன்று இஸ்ரேல் பிணைக்கைதிகளின் பெயர்களை ஹமாஸ் அமைப்பினரிடமிருந்து பெற்றிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இத்தகவலை தமது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ள அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு, அடுத்த ஏழு நாட்களில் நான்கு பெண் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இந்த போர் நிறுத்தத்தின்படி, 33 இஸ்ரேல் பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தரப்பில் சுமார் ஆயிரம் பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று தகவல்கள் கூறுகின்றன.

மேலும், கத்தார், அமெரிக்கா மற்றும் எகிப்து நாடுகளின் உதவியுடன் சுமார் 600 நிவாரண நலஉதவி வாகனங்கள் தினமும் காஸாவுக்கு சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பாலஸ்தீனிய மக்கள் காஸா பகுதியில் உள்ள தங்களது வீடுகளுக்கு திரும்பி வரத் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த போர் நிறுத்தத்தின் முதல்கட்டம் ஆறு வாரங்கள் வரை நீடிக்கும் என்றும், இஸ்ரேல் படை திரும்பப்பெறப்படுதல், கைதிகள் பரிமாற்றம், மனிதநேய உதவிகள் உள்ளிட்டவை இக்காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன.

<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளின் அநேக இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், திருநெல்வேலி மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமுதல் மிக கனமழையும், ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழையும் பெய்யக்கூடும் என்று கூறினார்.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக, கோ கோ போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா கோப்பையை வென்றது.

புதுதில்லியில் சற்றுமுன் நிறைவடைந்த இறுதியாட்டத்தில் இந்தியா 78-42 என்ற புள்ளிக்கணக்கில் நேபாளத்தை வென்றது.

இன்னும் சற்றுநேரத்தில் நடைபெறவுள்ள ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியா – நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இந்த ஆட்டம் இரவு மணி 7.45-க்கு தொடங்குகிறது

<<<<END>>>>>